T-UN-427

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௫௫	திருவள்ளுவர் யாண்டு ௨௦௧௨ ஆன்மதி-ஆடி 1981 சூலை—ஆகச்டு	மலர் ௪

மொழி முதனிலை இறுதிநிலை எழுத்துக்கள்

பாவலரேறு ச. பாலசுந்தரம்
துணை முதல்வர்,
கரந்தைப் புலவர் கல்லூரி.

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் திகழும் நல்லுலக மக்கள் வழக்கும் செய்யுளுமாகப் பேசியும் வரைந்தும் வழங்கும் தமிழ் மொழியின் செம்மையினையும் செம்மாப்பினையும், செந்தமிழியற்கை சிவணிய நிலத்தொடு முந்துநூல் கண்டு முறைப்பட ஆய்ந்து அதன் இயல்புகளைத் தொகுத்துணர்த்திய ஒல்காப் புலமைத் தொல்காப்பியனார் மொழியியலுள் ஐயந்திரிபுகள் நிகழாவண்ணம் எழுத்தியல் மரபுகளை வகுத்தமைத்துக் கொண்டு முதற்கண் அவற்றின் தனி இயல்புகளை நூன்மரபின் கண் விளங்க வரைந்து, பின்னர் அவ்வெழுத்துக்கள் பொருள் கருதி மொழியாக்கம் பெறும் இயல்பினை இரண்டாவதாகிய மொழி மரபினுள்,

''ஓரெழுத் தொருமொழி ஈரெழுத் தொருமொழி
இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி யுளப்பட
மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே''

எனக் கூறினார்.

இதன்கண் மூன்றே என்னும் ஏகாரந் தேற்றம்.

அவற்றுள் ஓரெழுத் தொருமொழிகள் இத்துணைய என்பார்,

''நெட்டெழுத் தேழே ஓரெழுத் தொருமொழி''

என்றார்.

இதனான் ஆ—ஈ—ஊ—ஏ—ஐ—ஓ—ஔ ஆகிய ஏழுமே ஓரெழுத்தொரு மொழி என்பது புலனாகிறது. கா—மா—பூ முதலாயவை உயிரும் மெய்யும் கூடி நிற்பதனால் இவைபோல்வன ஓரெழுத்தொரு மொழியா ஈரெழுத்தொருமொழியா என ஐயந் தோன்றுவது இயற்கை. ஏனெனின்,

''அகர முதல் னகர இறுவாய் முப்பஃ தென்ப''

என முதற்கண் மெய்யெழுத்துக்களும் எண்ணப்பெற்றுள்ளமை யின் என்க.

ஆயினும் உயிர்மெய்க் குறிலையும் உயிர்மெய் நெடிலையும் ஆசிரியர் ஓரெழுத்தாகக் கொள்வதனை

''தொடரல் இறுதி தம்முன் தாம்வரின்'' (உயிர் மயங்: 12)

''குற்றெழுத் திம்பரும் ஓரெழுத்து மொழிக்கும்'' ('' 65)

''குறிலே நெடிலே குறிலிணை குறில்நெடில்'' (செய்யு: 3)

என உடம்பொடு புணர்த்திக் கூறுவதனால் அறியலாம். இதனை ஒற்றுமை நயமென்பார் இயல் நூலார்.

இனி, யா, மா என்னும் ஓரெழுத்தொருமொழிகள் ஆய், ஆம் என மாறி நிற்பின் ஈரெழுத்தொருமொழியாகும். இவ்வாறு அமை வது தமிழ் மரபாகும்.

அஃதாவது தாமரை என்பது ஒரு சொல்லாகவும் தாவும் மரை எனக் கொள்ளின் இரண்டு சொல்லாகவும் பிரிப்பு முறையால் வருதல் ஒருவகை மரபு. எழுந்திருந்தான் என்பது ஒரு சொல் லாகவும் எழுந்து பின்னர் இருந்தான் என இரண்டு சொல்லாக வும் பொருள் நோக்கு முறையால் வருவது ஒருவகை மரபு. இவ் வாறே உயிர்மெய்யெழுத்தைப் புணரியல் நோக்கில் ஈரெழுத் தாகவும் பொருளைச் சுட்டிவரும் மொழி நோக்கில் ஓரெழுத் தாகவும் கொள்வது மொழியின் மரபாகும். அதனானன்றே ஆசிரியர் இவை பற்றிய தன்மைகளை **இயல்** என்னாது மரபு என்று தெளியுமாறு நூன்**மரபு**-மொழி**மரபு** எனப் பெயரிட்டுக் கூறுவாராயினர்.

எனவே ஓரெழுத்தொருமொழி என்னும்போது தனித்து ஓர் உயிர் நெடிலாக வருவது இலக்கணமென்றும் உயிர்மெய் நெடிலாக

வருவது மரபு என்றும் தெளிதல் வேண்டும்.

இனி நன்னூலாசிரியர்

''எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின் பதமாம்'' என இலக்கணம் வகுத்துக் கொண்டமையின் ''ஓரெழுத் தியல் பதம் ஆறேழ் சிறப்பின'' எனக் கூறினார். ஆண்டும் அவர் ஓரெழுத்துப் பதம் என்னாது இயல்பதம் என்று கூறியதன் நுட்பத்தை ஓர்தல் வேண்டும். இதுநிற்க

ஓரெழுத் தொருமொழி உயிர்மெய்யாக இருப்பின் நிலைமொழி வருமொழிகளோடு புணர்தற்கண் மெய்ம் முதலாகவும் உயிர் ஈறாகவும் கொள்ளப்படும் இதனை

''மெய்யின் வழியது உயிர் தோன்று நிலையே'' (நூன்: 18)

என்பார் ஆசிரியர். இவ்வியல்பு இரண்டிறந் திசைக்கும் தொடர் மொழிக்கும் அமையும்.

மக்களின் உணர்வுகள் எண்ணமாகிக் கருத்துக்களாகின்றன. கருத்துக்கள் சொல் வடிவமாக நிகழ்தலின் அவை சொற்களாக வெளிப்படுகின்றன. சொற்களின் கோவையே சித்தனைகள். சொற்றொடராகும் காரியத்திற்குச் சொற்கள் காரணம். சொற்களாம் காரியத்திற்கு எழுத்துக்கள் காரணம். எழுத்தாம் காரியத்திற்கு ஒலி காரணமாம்.

எனவே ஒலியாராய்ச்சி எழுத்துச் செம்மையாக அமைவதற்கும் எழுத்தாராய்ச்சி சொற்கள் செம்மையாக அமைவதற்கும் சொல்லாராய்ச்சி சொற்றொடர்கள் (உரையும்—செய்யுளும்) செம்மையாக அமைவதற்கும் காரணங்களாகும்.

ஆகலான் ஆசிரியர் தொல்காப்பியர் சொற்றொடர் அமைப்பு நன்கு விளங்குதற் பொருட்டுச் சொற்கள் புணரும் புணரியல் மரபுகளையும் இலக்கணங்களையும் கூற எழுத்ததிகாரத்துள் ஆறு இயல்களை அமைத்துக் கொண்டுள்ளார். ஏனைய மூன்று இயல்களும் இப்புணரியலுக்கு ஓராற்றான் கருவியாகவே அமைந்துள்ளமை ஓர்ந்தறியலாம். அஃதாவது சொற்களுக்கு உறுப்பாகிய எழுத்துக்களையும் அவற்றின் இயல்களையும் நூன்மரபிலும் அவை மொழிநிலை பெற்றுவரும் முறைகளை மொழி மரபிலும்—புணருங்கால் ஏற்படும் ஒலித்திரிபுகளுக்குக் காரணம் புலப்பட அவற்றின் பிறப்பமைதிகளை பிறப்பியலிலும் ஆசிரியர் முதற்கண் விளங்க அமைத்துள்ளார்.

மொழிகள் தம்முள் புணருங்கால் நிலைமொழி யிறுதியும் வருமொழி முதலுமாகப் புணர்தலின் மொழிகளின் முதனிலை இறுதிநிலை களை ஆராய்ந்து அமைத்துக் கொள்ள வேண்டியது இன்றியமை யாததாகலின் இவற்றை மொழி மரபினுள் வரையறை செய்து அமைக்கின்றார்.

அஃதாவது ஓரெழுத்து மொழி முதலாய மூவகை மொழிகளும் நூன் மரபிற் கூறிய முப்பத்துமூன்று எழுத்துக்களையும் உறுப்பாகக் கொண்டு இயங்குமெனினும் மெய்யெழுத்துக்கள் உயிர்ப்பொலி இல்லாதனவாகலின் உயிரோடு கூடியும் உயிரைச் சார்ந்தும் மொழிக்கு உறுப்பாதலான்றித் தனித்து வருதலில்லை. அங்ஙனம் உயிரோடு கூடி உயிர் மெய்யாகவும் சார்ந்து ஒற்றாகவும் வரும் மெய்யெழுத்துக்களும், தனித்தியங்கும் ஆற்றலுடைய உயி ரெழுத்துக்களும் ஒரு மொழியின் மூவிடத்தும் வரும். இவ்வாறு ஒரு மொழியின் மூவிடத்தும் எழுத்துக்கள் வரும் இயல்புகளை ஆராய்ந்து அவற்றை மொழிமரபினுள் விளக்குகின்றார் ஆசிரியர்.

இவற்றுள் இவை இடைநிற்கும் மரபினை மெய்ம்மயக்கம் பற்றி யும்—ஈரொற்றுடனிலை பற்றியும்— மயங்கியல் பற்றியும் கூறிய இலக்கணங்களால் பெறப்படவைத்தார்.

இனி அவை முதலிலும் இறுதியிலும் இடை நிற்கும் மரபினை மொழி மரபினுள் உணர்த்துவராய், ''பன்னீருயிரும்'' என்னும் நூற்பா முதலாக உள்ள இருபத்து நான்கு நூற்பாக்களாற் கூறு கின்றார். அவற்றுள் முதனிலைபற்றிக் கூறும் நூற்பாக்கள் வருமாறு:

''பன்னீ ருயிரும் மொழிமுத லாகும்'' (மொழி மரபு: 26)
''உயிர்மெய் யல்லன மொழிமுத லாகா'' ('' 27)

''கதந பமவெனும் ஆவைந் தெழுத்தும்
எல்லா உயிரொடும் செல்லுமார் முதலே'' ('' 28)

''சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
அஐஔ வெனும் மூன்றலங் கடையே'' (''29)

''உ ஊ ஒஓ என்னும் நான்குயிர்
வஎன் எழுத்தொடு வருதல் இல்லை'' ('' 30)

''ஆஎஒஎனும் மூவுயிர் ஞகாரத் துரிய'' (''31)

''ஆவோ டல்லது யகர முதலாது'' ('' 32)

''முதலா ஏன தம்பெயர் முதலும்'' ('' 33)

"குற்றிய லுகரம் முறைப்பெயர் மருங்கின்
ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும்" (மொழிமரபு-34)
"முற்றிய லுகரமொடு பொருள்வேறு படாஅது
அப்பெயர் மருங்கின் நிலையிய லான" (" 35)

இவற்றின் பொருள்:— பன்னிரு உயிரெழுத்துக்களும் (தனித்து) மொழி முதற்கண் வரும். உயிரோடு கூடி உயிர்மெய்யாகவன்றி மெய்யெழுத்துக்கள் (தனித்து) மொழிமுதற்கண் வாரா. மெய்கள் உயிரோடு கூடி வருங்கால் க—த—ந—ப—ம என்னும் ஐந்தும் பன்னிரண்டு உயிரோடும் கூடிவரும். சகரமெய் அ-ஐ-ஔ என்னும் மூன்றைத் தவிர ஏனைய ஒன்பது உயிர்களோடு மட்டும் கூடிவரும். வகரமெய் உ-ஊ-ஒ-ஓ என்னும் நான்கு உயிர்களைத் தவிர ஏனை எட்டு உயிர்களோடுமட்டும் கூடி முதற்கண் வரும். ஞகரமெய் ஆ-எ-ஒ என்னும் மூன்று உயிரோடு கூடி வரும்; ஏனைய ஒன்பது உயிர்களுடன் கூடிவராது. யகரமெய் ஆ என்னும் ஓர் உயிர் எழுத்துடன் கூடிவரும்; ஏனையவற்றோடு கூடி வராது.

ஈண்டு எடுத்தோதப் பெற்ற க-த-ந-ப-ம-ச-வ-ஞ-ய என்னும் ஒன்பதும் தவிர்ந்த ஏனைய ங-ட-ண-ர-ல-ழ-ற-ன என்னும் ஒன்பது மெய்களும் தத்தம் பெயர் கூறுமிடத்து முதலாக நிற்கும். இவையேயன்றி மொழிமுதற்கண் வருமெனப்பட்டவை விலக்கப் பெற்ற உயிர்களோடு தம்பெயர் கூறுதற்கண் மொழி முதலாக வரும். அன்றி இவை தனித்துப் பிறபொருளைச் சுட்டும் மொழியாகவோ மொழிக்கு உறுப்பாகவோ மொழிமுதற்கண் வாரா என்க.

இனிச் சார்பெழுத்துக்களுள் ஒன்றாய குற்றியலுகரம் முறைப் பெயராகிய நுந்தை என்னும் சொல்லின்கண் முதல் நிற்கும் நகர ஒற்றை ஊர்ந்து மொழிமுதலாக வரும்; வருங்கால் மொழியிறுதிக் குற்றியலுகரம் மொழியிறுதி முற்றியலுகரச் சொல்லோடு பொருள் மாறுபடுதலைப்போல மாறுபடாது; காரணம் பெயராக மட்டும் வருதலான் என்க. ஏனைய இரண்டு சார்பெழுத்துக்களும் ஒரு மொழியின் இடையே யன்றி வாராமையின் அவை பற்றி ஆராய்ச்சி இல்லை என்க.

இங்ஙனம் மொழிமுதற்கண் வருமெனப்பட்ட எழுத்துக்களை விரித்து நோக்கின் அவை உயிர் பன்னிரண்டு உயிர்மெய் எண்பத்தொன்று குற்றியலுகரம் ஒன்று ஆகத் தொண்ணூற்று நான்காக இருப்பதை அறியலாம். இவற்றைக் கீழ்வரும் அட்டவணையிற் காண்க.

1. மொழி முதலெழுத்துக்கள்.

	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ	12
க்	க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ	12
×	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—
ச்	—	சா	சி	சீ	சு	சூ	செ	சே	—	சொ	சோ	—	9
ஞ்	—	ஞா	—	—	—	—	ஞெ	—	—	ஞொ	—	—	3
×	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—
×	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—
த்	த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ	12
ந்	ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ	12
ப்	ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ	12
ம்	ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ	12
ய்	—	யா	—	—	—	—	—	—	—	—	—	—	1
×	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—
×	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—
வ்	வ	வா	வி	வீ	—	—	வெ	வே	வை	—	—	வௌ	8
×	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—
×	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—
×	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—
×	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—
குற்றியலுகரம்					நு								1
												ஆக	94

எனவே தனிமெய் பதினெட்டும் உயிர்மெய் நூற்றுமுப்பத்தாறும் மொழி முதற்கண் விலக்குண்டன.

இடைக்காலத்தும் பிற்காலத்தும் போலிவகையாலும் திசை வழக்காலும் தோன்றிய சமன்—ஞமன். ஞமலி—ஞீலம்—யவன் முதலாய தமிழ்ச் சொற்களையும் – சையம்—யமன், யுகம், யூகம், யோகம், யௌவனம் முதலாய வட சொற்களையும் ஏற்று நன்னூலார் மொழிமுதல் எழுத்துக்களைக் கூட்டியுரைத்தார்—அன்றியும் பிரிப்பப் பிரியா ஒரு சொல்லாகிய அங்ஙனம்-இங்ஙனம் முதலாய சொற்களைப் பிரித்து 'ஙனம்' என்பதனை ஒரு சொல்லாகக் கருதிச் சுட்டு வினாக்களை முன்னிட்டுக் கொண்டு ஙகரம் அகரத்தோடு கூடி மொழி முதற்கண் வரும் என நன்னூலார் கூறினர். [அது பொருந்தா தென்பதனோடு தமிழியல்புக்குப் பேரழிவாகும். என்பதனை எனது மெய்ம்மயக்க ஆய்வுக் கட்டுரையுள் விளக்கியுள்ளேன். மற்றும் மொழிமுதற் குற்றுகரத்தைப் பிற்கால இலக்கண நூலார் ஏலாதுவிட்ட குறையை எனது மொழி முதற் குற்றியலுகரம் என்னும் கட்டுரையில் விளக்கியுள்ளேன் ஆண்டுக் காண்க.]

அடுத்து மொழியிறுதியில் நிற்கும் எழுத்துக்களைப் பற்றிக் கூறும் நூற்பாக்கள் வருமாறு:—

உயிர்ஔ எஞ்சிய இறுதியாகும் (மொழிமரபு-36)
கவவோ டியையின் ஔவு மாகும் ('' 38)
எஎன வருமுயிர் மெய்யீறா காது ('' 38)
ஒவ்வும் அற்றே நவ்வலங் கடையே ('' 39)
ஏஓ எனும் உயிர் ஞகாரத் தில்லை ('' 40)
உஊ காரம் நவவொடு நவிலா ('' 41)
உச்ச காரம் இருமொழிக் குரித்தே ('' 42)
உப்ப காரம் ஒன்றென மொழிப
இருவயின் நிலையும் பொருட்டா கும்மே ('' 43)
எஞ்சிய வெல்லாம் எஞ்சுத லிலவே ('' 44)
ஞணந மனய ரலவழ ளஎன்னும்
அப்பதி னொன்றே புள்ளி யிறுதி ('' 45)
உச்சகார மொடு நகாரஞ் சிவணும் ('' 46)
உப்பகார மொடு ஞகாரையும் அற்றே
அப்பொரு ளிரட்ட திவணை யான ('' 47)

வகரக் கிளவி நான்மொழி யீற்றது (" 48)
மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த
னகரத் தொடர்மொழி ஒன்பஃ தென்ப
புகரறக் கிளந்த அஃறிணை மேன (" 49)

இவற்றின் பொருள்:— ஔகாரம் ஒழிந்த உயிர் பதினொன்றும் தனித்து மொழியிறுதிக்கண் வரும்; ககர வகர மெய்களோடு கூடின் ஔகாரம் மொழி யிறுதியில் வரும்; எகரம் (அளபெடையாகத் தனித்தன்றி) மெய்யோடு கூடி ஈற்றில் வராது; ஒகரம் நகரமெய் ஒன்றோடு மட்டும் கூடி ஈறாகும்; ஏகார ஓகாரங்கள் ஞகாரத்தோடு கூடி ஈறாகாது; உகரமும் ஊகாரமும் நகரத்தோடும் வகரத்தோடும் கூடி ஈறாதல் இல்லை; மற்றைய அ, ஆ, இ, ஈ, ஐ என்னும் உயிர்கள் எல்லா மெய்யோடும் கூடி ஈறாக நிற்கும்.

புள்ளி எழுத்துக்களுள் ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்னும் பதினொன்றும் மொழியிறுதியில் வரும். இவற்றுள் நகரம் உச்சகாரம்போல இரண்டு சொற்களில் மட்டும் ஈறாக வரும். ஞகரம் உப்பகாரம்போல இரண்டு சொற்களில் மட்டும் ஈறாக வரும்; ஆனால் அதுபோல இரு பொருளில் வராது; ஒரு பொருளே தரும். வகரம் நான்கு சொற்களில் மட்டும் இறுதியில் வரும். னகரம் ஈரெழுத் தொருமொழி யல்லாத தொடர்மொழிகளில் அஃறிணைப் பொருள்மேல் மகரத்தோடு மயங்கா எனக் குற்றமற வரையறுக்கப் பெற்றவை ஒன்பது சொற்கள் எனக் கூறுவர் புலவர்.

இவற்றை விரித்து நோக்கின் மொழி யிறுதிக்கண் தனித்து வரும் உயிர் பதினொன்று, மெய் பதினொன்று, உயிர்மெய் நூற்றைம்பது ஆக நூற்றுஎழுபத்திரண்டாதல் புலனாம். மற்றும் சார்பெழுத்துக்களுள் குற்றியலுகரம் வல்லாறூர்ந்து இறுதியில் வரும் என்றமையின் அஃதொன்றனையும் கூட்ட நூற்றெழுபத்து மூன்று எழுத்துக்கள் மொழியில் வரும் என்பதைத் தெளியலாம். இவற்றை அடுத்து வரும் அட்டவணையிற் காண்க.

இங்ஙனம் வரையறுக்கப் பெற்றவை தவிர்ந்த ஏனைய உயிர்மெய் எழுத்துக்கள் தம்பெயர் கூறுதற்கண் அவை முதல் எனற்கே ஏற்புடையவாகலானும் மெய்யெழுத்துக்கள் அகரமொடு சிவணி உயிர்மெய்போல் கூறப்படுதலானும் இறுதி நிலைக்குப் புறனடை கூறாமல் எஞ்சியவெல்லாம் எஞ்சுதலிலவே எனக் கூறிச் சென்றார்.

(வளரும்)

கையறவு

● பண்ணாராய்ச்சி வித்தகர் ●

குடந்தை ப. சுந்தரேசனார்.

எளிய தோற்றம் இனிய மொழி நட்புணர்வு நயத்தக்க நாகரிகம் கொள்கை உறுதி குறையைச் சுட்டிக் காட்டுதலில் அஞ்சாமை பணிவுடைமை நனவினும் கனவினும் தமிழிசை வளர்க்கும் நாட்டம் சைவ சமய ஒழுக்கம் இவற்றின் திரண்ட வடிவமே பண்ணாராய்ச்சி வித்தகர்.

கரந்தைத் தமிழ்ச் சங்கச் சார்பில் தவத்திரு விபுலானந்த அடிகளாரின் யாழ்நூல் அரங்கேற்றம் நிகழ்ந்தநாள் தொட்டு சங்கத்தின் பேரன்பராய் இருந்து சங்கம், சங்கக் கல்வி நிலையங்களின் முத்தமிழ் விழாக்களில் கலந்து கொண்டு இசைத்தமிழ் பற்றிய அரிய கருத்துக்களை அழகாகப் பேசியும் — தமிழ்ப் பொழிலில் கட்டுரை எழுதியும் தொண்டாற்றிய பேரறிஞர்.

தமிழகத்தில் உள்ள தமிழ் மன்றங்கள் யாவற்றிலும் பங்கு கொண்டு யாழ் நூலின் சிறப்புக்களைப் பாடியும் பேசியும் விளக்கிய பண்பாளர். தமிழிசை ஆராய்ச்சியே குறிக்கோளாகக் கொண்டு பண்டைத் தமிழ் நூலிற் காணப்பெறும் அரிய இசைக்கருத்துக்களை ஆய்ந்து வெளியிட்டு வந்த அண்ணல்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இசைத்துறையில் பணியாற்றியவர்; அண்மையில் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் தமிழிசை ஆய்வை மேற்கொண்டு சில அடிப்படைகளைத் தொகுத்து வருகின்ற நிலையில் கூற்றுவன் அவரை நம்மிடத்திலிருந்து பிரித்துவிட்டான்.

இவரின் பிரிவு பண்டைத் தமிழிசை ஆய்விற்கும் இசைத் தமிழ் உலகிற்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்; இவருடைய கட்டுரைகளையும் ஆய்வுகளையும் தொகுத்து வெளியிடப் பல்கலைக் கழகம் ஆவன செய்யும் என நம்புகிறோம்.

பதவியையும் செல்வத்தையும் கருதாமல் தன் உடல் நலத்தையும் எண்ணாமல் அயராது இசைத்தமிழ் வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய ஏழிசைத் தலைமகன் –செஞ்சொற்பொழிவாளர் –யாழ் நூல் விரிவுரையாளரைப் பிரிந்து வருந்தும் அவருடைய துணைவியாருக்கும் உறவினர் நண்பர்கட்கும் எங்கள் ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இவ் இசையறிஞரின் நல்லுயிர் எம்பெருமான் திருவடி நீழலில் இன்ப அமைதியுறவேண்டிப் பணிகின்றோம். ★

நாட்டுப் புறக்
கதைகள் வரலாறு

அ. ம. சத்தியமூர்த்தி,
எம். ஏ; எம். ஃபில்;
பி-ஜி-டிப்-இன்-மேனுஸ்கிரிப்டாலஜி,
தமிழ் இலக்கியத் துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

முன்னுரை:

நாட்டிற்கே வாழ்வளிக்கும் கிராம மக்களிடையே தோன்றி வளர்ந்த, வளர்கின்ற இலக்கியங்கள் எண்ணற்றவை. அத் தகைய இலக்கியம், அதுபற்றிய ஆய்வு, கொள்கை முதலியன மட்டும் தமிழில் பிற்காலத்தில்தான் கருதப் பட்டிருக்கிறது. இவ் வகையில் தமிழக நாட்டுப்புற இலக்கியத்தின் ஒரு பகுதியான நாட்டுப்புறக் கதைகளின் வரலாற்றை இவண் தொகுத்துக் காண முற்படுவதன் மூலம், இவ்விலக்கிய வகையின் சிறப்பு, தேவை முதலியன விளங்கும்.

தமிழ் நூல்களில் நாட்டுப்புறக் கதைகள்:

நாட்டுப்புறக் கதைகளுக்கான இலக்கணம் தொல்காப்பியத்தில் காணப்படுகிறது என்பர்.[1] தமிழ் இலக்கிய வரிசையில் சங்க இலக்கியம் முதற்கொண்டு தொடர்ந்த இலக்கிய வகைகளில் நாட்டுப்புற இலக்கியக் கூறுகளைக் காண முடிகிறது. அடியார்க்கு நல்லார் உரையை ஆராய்ந்த ஒருவர் சிலப்பதிகாரத் தில் காணப்படும் நாட்டுப்புறக் கதைகளையும் பிரித்துக் காண முற்பட்டிருக்கிறார்.[2]

தமிழ் இலக்கியங்களில் மேற்கோளாக எடுத்தாளப்பட்டதாக 1255 கதைகளைத் தொகுத்து 'மேற்கோள் விளக்கக் கதைகள்' எனும் பெயரில் இரு தொகுதிகளாக சு. அ. இராமசாமிப் புலவர் வெளி யிட்டுள்ளார். இவற்றுள் சில நாட்டுப்புறக் கதைகள் கலந்து காணப்படுகின்றன. கதைகள் பலவற்றைத் தொகுத்து வெளி யிடும் பணியில் இவர் மேற்கொண்ட முயற்சி மிகப் பெரியது. ஆயினும் தமக்கு மேற்கோள்களாகத் தந்த நூல்களின் பெயர்களை இவர் குறிப்பிடாமையால், இவற்றை முழுவதுமாக ஆய்வுச் சான்றுகளாக ஏற்க இயலவில்லை.

மூலநூல்கள் தொகுப்பும் பதிப்பும்:

தமிழில் நாட்டுப்புறப் பாடல்களை முதன்முதலாகக் கி.பி. 1943இல் 'காற்றிலே மிதந்த கவிதை' எனும் பெயரில் தொகுத்து வெளியிட்ட பெருமை மு. அருணாசலத்தைச் சாரும். நாட்டுப்புற இலக்கிய வகைகளுள் கதைகள் இற்றைக்கு ஏறத்தாழ 115 ஆண்டுகளுக்கு முன்பாக, கி. பி. 1865-இல் பண்டித நடேச சாத்திரியாரால் திராவிட பூர்வ காலக் கதைகள்' எனும் பெயரில் வெளியிடப் பெற்றுள்ளது. இதன்கண் நாற்பத்தொன்பது கதைகள் உள்ளன. நமக்குக் கிடைக்கின்ற நாட்டுப்புறக் கதைகள் நூல்களுள் இதுவே தொன்மையானதாகத் தெரிய வருகின்றது. இந்நூலின்கண் தொகுப்பாளரது முன்னுரை எதுவும் காணப்படவில்லை.

நாட்டுப்புற இலக்கிய வரலாறு' எழுதிய டாக்டர் சு. சண்முக சுந்தரம் தனது நூலில் மேற்குறித்த நடேச சாத்திரியாரின் நூலைக் குறிப்பிடவில்லை. இவர் கி. பி. 1871-இல் பதிப்பிக்கப் பட்ட 'விக்கிரமாதித்தன் கதைகள்' எனும் நூலை முதலாவதாகக் கருதுகிறார்.

திராவிட நாட்டுக் கதைகளைப் பதிப்பித்தோர் உலகின் பிறபகுதிக் கதைகளையும் தமிழில் எழுதவும் முயன்றனர். அதன் பயனாகப் பண்டித நடேச சாத்திரியாரின் 'தக்காண பூர்வ கதைகள்' (1886) எனும் நூல் பிறந்தது. இவ்வகையில் தோன்றிய 'விக்கிரமாதித்தன் கதைகள்' (1871), 'ஈசாப் கதைகள்' (1952) 'டெக்கமரான் கதைகள்' (1954), 'தெனாலிராமன் கதைகள்' (1355), '1001-இரவில் சொல்லிய அரபுக் கதைகள்' (1957), 'உலக நாடோடிக் கதைகள்' (1962), 'ஆர்மீனிய நாடோடிக் கதைகள்' (1978), 'பிரெஞ்சு நாடோடிக் கதைகள்' (1979), 'மலைநாட்டு நாடோடிக் கதைகள்' (1979) முதலியன குறிப்பிடத் தக்கன.

கி. பி. 1957 முதல் 63 வரையிலான இடைப்பட்ட காலத்தில் திரு சு. அ. இராமசாமிப்புலவர் 'தென்னாட்டுப் பழங்கதைகள்' எனும் பெயரில் எட்டுத் தொகுதிகளில் 262 கதைகளைத் தொகுத்து வெளியிட்டுள்ளார். இதற்கிடையில் 'தமிழக நாட்டுப்புறக் கதைகளைப்' பிரித்துக் காணும் முயற்சியும் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. இவ்வகையில் கா. அப்பாத்துரையின் 'நாட்டுப்புறக் கதைகள்' (1954), வை. கோவிந்தனின் 'தமிழ் 'நாட்டுப் பழங்கதைகள்' (1965), கி. இராசநாராயணனின் 'தமிழ் நாட்டு நாடோடிக் கதைகள்' (1966), 'தமிழ் நாட்டு கிராமியக் கதைகள்' (1977), கே. ஏ. சீதாலட்சுமியின் 'Folk-

tales of Tamil Nadu' (1975), இரா. இளங்குமரனின் 'தமிழ் நாட்டுப் பழங்கதைகள்' (1976) ஆகியன குறிப்பிடத்தக்கன. ஆயினும் கி. இராசநாராயணனின் 'தமிழ் நாட்டு நாடோடிக் கதைகள்' ஒன்றே நாட்டுப்புற இலக்கியக் கூறினை மிகுதியாகப் பெற்று உள்ளது

பழமொழிகளில் கதைகள் :

சில சொற்களில் சமுதாயத்தின் பேருண்மைகளை விளக்கி நிற்பவை பழமொழிகள். பழமொழிகளை விளக்கிக் காட்ட மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் விளைவால் இராமலிங்க முதலியாரின் 'பழமொழிக் கதைகள்' (1902), க. இனியனின் 'பழமொழி விளக்கக் கதைகள்—இரு தொகுதிகள்' (1950), முதலான நூல்கள் தோன்றின.

கதை ஆய்வுகள் :

அயல் நாடுகளில் நாட்டுப்புறக் கதைகளைத் தொகுத்துக் காணுதல் வகைப்படுத்தல், மொழியியல் கண்ணோட்டத்தில் காணுதல் முதலான பல நோக்குகளில் ஆய்வுகள் நடந்துள்ளன, நடக்கின்றன. ஆயினும் தமிழில் நாட்டுப்புறக் கதைகள் பற்றிய ஆய்வே துவங்கவில்லை எனக் கூறலாம்.

முடிவுரை :

இந்நிலையில் மறைந்து கொண்டிருக்கும் தன்னிகரற்ற இலக்கிய வகை ஒன்றின் வரலாற்றை அறிவதன் மூலம், அவற்றின் தனிச் சிறப்பும், அவற்றை உருவாக்கிய மக்களின் வாழ்க்கை நிலையும் தெற்றென விளங்கும். ★

பின் குறிப்புகள் :

1 சண்முகசுந்தரம் சு.
நாட்டுப்புற இயல்—ஓர் அறிமுகம், ப-ம் 80

2 சுப்பிரமணியன் டாக்டர் ச. வே.
அடியார்க்கு நல்லார் உரைத்திறன், ப-ம் 182—190

துணை நூல்கள் :

சண்முகசுந்தரம் சு;
நாட்டுப்புற இயல்—ஓர் அறிமுகம்,
இலக்கிய மாணவர் வெளியீடு, சென்னை, சனவரி 1975

சுப்பிரமணியன் டாக்டர் ச. வே.
அடியார்க்கு நல்லார் உரைத்திறன்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-20,
மார்ச்சு 1976

ஒருமைப்பாடு உணர்த்தும் ஒப்பற்ற கவி பாரதி

செல்வி மு. அஞ்சலி அன்னபாய்

பாரத நாட்டு மக்களின் மன உணர்வுகளையும், காலை இளம் பரிதி முதல் களிப்பூட்டும் சின்னஞ்சிறு குருவிவரை காண்பன வற்றையும் கருதுவனவற்றையும் இசையோடு குழைத்து இனிய சொல்லோவியமாகத் தீட்டிப் பைந்தமிழிலே சிறிதளவு கல்வி யுடையாரும் படித்துப் பொருளுணர்ந்து உள்ளக் கிளர்ச்சியுடன் இன்புறுமாறு பலப்பல வகையில் புதுப்புது முறையில் இன்பக் கவிதைகளைப் படைத்த பெரும் புலவராய், கவிஞராய், நெஞ்சத் தில், நீங்கா இடம்பெறத்தக்க சொல்லோவியங்களை வடித்து விட்ட ஓவியராய், வருவதைக் கூறும் ஆற்றல்மிக்க சோதிட ராய்த் திகழ்ந்து, மக்களின் உள்ளங்களிலே விடுதலை வேட் கையை விளையச் செய்து, விதைத்த பயிர் முளைத்துப் பலன் அடையும் முன்னரே பொன்னான உயிர் தன் உடம்பினின்றும் பிரிய அனுமதி அளித்து, தமிழ் மக்களின் உள்ளங்களிலே நீங்கா இடம் பெற்றுச் சென்ற 'பாரதி'யை நினைக்குந்தோறும் நெஞ்சிலே ஒரு கிளுகிளுப்பு; அவர் எண்ணங்களை, கொள்கை களை, உணர்வுகளைப் பற்றி எழுதத் தொடங்கும் பொழுது கரங்களிலே ஒரு பரபரப்பு.

பாரதி தன்னுடைய ஒவ்வொரு கவிதையிலும் உள்ளத்தின் உணர்ச்சியோடு ஒருமைப்பாட்டுணர்வையும் வெளியிடுகிறார். கொட்டிக் கிடக்கின்ற வைரக் குப்பையிலே சில வைரங்களின் ஒளி மட்டும் காண்போம்.

கடவுள் வாழ்த்துப் பாக்களைக் (தோத்திரப் பாடல்கள்) கண்ணுறு வோம் எனின், விநாயகன், முருகன், கண்ணன், முத்துமாரி, புத்தர், அல்லா ஆகியோரைத் தொழுவதையும், வேண்டிக் கொள்வதையும் காணலாம். கண்ணனைத் தோழனாகவும், தந்தையாகவும், தாயாகவும், சேவகனாகவும், அரசனாகவும், சீடனாகவும், சற்குருவாகவும், காதலனாகவும், குலதெய்வ மாகவும் கற்பித்துப் பாடுகின்றார். எங்கும், எதிலும் ஒருமைப் பாடு என்று கூறின் பொய்யாகுமா?

''முப்பது கோடியும் வாழ்வோம்—வீழின்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்''

எத்தகு எண்ணம்! ''எல்லாரும் இந்நாட்டு மன்னர்'' எனவே எல்லோரும் உரிமைக்காகப் போராடுவோம், அன்றி உயிர் விடுவோம். இவண் 'முழுமையும்' என்பது நோக்கத்தக்கது.

தன்னுடன் உடலால் வேறுபட்டு, உயிரால் ஒன்றிய மக்கட்கு, அனைத்து மக்களின் உடம்புதான் தனியேயன்றி உயிர் அனைவருக்கும் ஒன்றேயாகும் என்ற ஒருமையுணர்வை,

''முப்பது கோடி முகமுடையாள்—உயிர்
மொய்ம் புறம் ஒன்று டையாள்''

என்று வெகு அழகாக எடுத்தியம்புகின்றார்.

மொழிகள் தனியேயன்றி, அனைவருக்கும் சிந்தனை ஒன்றாகவே இருக்கும் என்றும், எனவே செயல்படுத்துவதும் ஒற்றுமையுடனே என்றும் வெகு நேர்த்தியாக,

''செப்புமொழி பதினெட் டுடையாள் எனின்
சிந்தனை ஒன்றுடையாள்''

என்று தனது கவிதைகளிலே உள்ளத்துணர்வுகளை, எண்ண அலைகளின் எழுச்சிகளைக் கொட்டுகிறார். முப்பது கோடி மக்களும் ஒன்று சேர்ந்து தாய் நாட்டை உருவாக்குகின்றனர். அத்தாய்க்கு அறுபது கோடி தடக்கைகள் உண்டு.

''அறுபது கோடி தடக்கை களாலும்
அறங்கள் நடத்துவள் தாய்''

என்று பகர்கின்றார்.

அனைத்து மாநிலங்களும் ஒன்றுடன் ஒன்று ஒன்றியிருத்தல் வேண்டுமென்றும், ஒரு மாநிலத்தில் உருவாகும் பொருள் யாவும் பிற மாநிலங்களுக்கும் உரியவை என்றும், ஒருமொழி பேசுவோர் பிற மொழிக்கும் மதிப்பும், மரியாதையும் செலுத்துதல் வேண்டுமென்றும் ஒருமைப்பாட்டிற்கு வழிகாட்டி அடிகோலி

''கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்வோம்;
சிங்க மராட்டியர் தம்கவிதை கொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்''

எனப் பாடியுள்ளார்.

சாதி, நிற, இன வேற்றுமைகள் மக்களின் உள்ளங்களில் புகாமல்

யாவரும் ஒன்று என்னும் எண்ணத்தை ஊட்டற்கு உறுதுணை யாக அழகியதோர் உவமை காட்டுகின்றார்.

''வெள்ளை நிறத்தொரு பூனை—எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்;
பிள்ளைகள் பெற்றதப் பூனை—அவை
பேருக்கொரு நிறமாகும்.
வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்—அதில்
மானுடர் வேற்றுமை யில்லை
எண்ணங்கள் செய்கைக ளெல்லாம்—இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்''

இளந் தளிர்களைத் தழுவிச் செல்லுகின்ற வசந்த காலத் தென்ற லாக இளங் குழந்தைகளை நோக்கி அன்போடு அரவணைப்பாக,

''சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்''

என்று மொழிகிறார்.

அதே சமயத்தில் புதுமைகளைச் செவிமடுக்கா பழஞ்சாதிப் பஞ் சாங்கங்களின் செவிப்பறைகளைக் கிழிக்கின்ற அளவிற்கு,

''நிகர் என்று கொட்டுமுரசே—இந்த
நீணிலம் வாழ்பவர் எல்லாம்
தகர் என்று கொட்டுமுரசே—பொய்மைச்
சாதி வகுப்பினை யெல்லாம்''

என்று முரசறைகிறார்.

பாரதி கண்ட ஒருமைப்பாடு வீட்டிற்கு, நாட்டிற்கு, உலகிற்கு உகந்தது. ஒருமைப்பாட்டை உணர்த்துவதில் தன்னிகரற்றுத் திகழும் பாரதியை ஒருமைப் பாடுணர்த்தும் ஒப்பற்ற கவி எனல் ஏற்றதே. அவர்தம் பாதையிலே அவர் காட்டிய ஒளியிலே நடந்து சென்று நாட்டின் பெருமையைக் காத்து, அவர் பாடி யுள்ள,

''எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓர் இனம்
எல்லாரும் இந்திய மக்கள்
எல்லாரும் ஓர் நிறை எல்லாரும் ஓர் விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்''

எனும் இனிய அடிகளை நம் நெஞ்சாரப் பாடி இன்புறுவோம். ★

இசை நாடகச் செம்மல்-
ஓர் அறிமுகம்

சி. கோ. தெய்வநாயகம்,
எம். ஏ; எம். பில்; பி. எசு. சி;
டிப்-இன். அக்ரி; செர்ட்-இன். எபி&ஆர்க்;
செர்ட்-இன். லிங்; செர்ட்-இன். கிர்;

இசைத் தமிழின் எடுத்துக் காட்டுக்கள் ... மும்மூர்த்திகள் ... ... தியாகப் பிரம்மமும், முத்துச்சாமி தீட்சிதரும், சாமா சாத்திரிகளும் வாழ்ந்து சிறந்தது காவிரிக் கரையின் தஞ்சை மாவட்டமேயாகும். பிரமத்தின் நான்காந் தலையாக; ஆயின் முயல்வாரின்மையான் குடத்துள் விளக்காய் ஒளிதரும் திரு நாராயண தீர்த்தரின் வரலாறு முத்தமிழ்ச் செல்வர்க்கோர் மூலபண்டாரமாகும்.

நற்றமிழ் நவின்றிடும், நாவளந் தந்திடும் காவிரியின் காலாறுகளுள் கவினியது குடமுருட்டியாறு. இவ்வியாற்றின் இப்பெயர் பண்பாற்பட்ட பெயர் என்பது இவ்வாற்றினை நீர் பெருகிய காலத்தும், வற்றிய காலத்தும் காண்மார்க்குப் புலனாம். தண்ணீர் முகந்து செல்லும் பெண்ணீர்மை கன்றாமல் அவர்தம் குடமுருட்டி, களி தெருட்டி, விளையாட்டுப் புரிந்திடும் நீரியல்பும், கரைபோட்ட பச்சைக் கண்டாங்கிச் சோலைகள் தாம் கண்டாங்கு நிற்க வைக்கும் காட்சிகளும், மாட்சிகளும்...... அம்மம்ம...... குடமுருட்டிக்கேயுரிய இடமருட்டி என்றிடலாம்.

முந்துறுத்த பசுமையும், பூமையும், மணமையும் நிரம்பிய குடமுருட்டிக் கரையோரத் தண்டாங்கியூர்களுள் பூண்டாங்கியாயிலங்குவது திருப்பூந்துருத்தியே. தஞ்சைக்கு வடமேற்கே தஞ்சை — கண்டியூர் — திருக்காட்டுப்பள்ளிச் சாலையில் சுமார் பத்து கிலோ மீட்டர் தொலைவில், தொலைவில்லா இயற்கைக் கவினுடனும், அமைதியுடனும் அமைந்துள்ள இவ்வூர்க்குத் தஞ்சையின் அகப்புறப் பேருந்து வாய்ப்புக்கள் நிரம்பவுள்ளன.

அப்பர் காட்டும் இம்பர் வழிக்கு ஏற்றதாயிலங்கிடும் புட்ட வன நாதர் கோயிலும், வைணவ, பிள்ளையார் கோயில்களும் நிரம்பிய இவ்வூரில் தான் அப்பரடிகளின் உழவாரப்பணி சிறந்

தோங்கி கிரியை மார்க்கத்தினை உலகிற்கு வழி காட்டிற்று. முக்கனிச் சோலைகளும் அவற்றோடும் முத்தமிழ் மாலைகளும் நெருங்கி வளரும் மேலத்திருப்பூந்துருத்தியின் வடகிழக்கு ஈசானி யத்தில் அமைந்துள்ள சிறு மடந்தான் நாளைய பெரும்புகழின் இருப்பிடமாகும். நற்றமிழிசையும், நாடகத் தமிழும் மற் றொன்று விரித்து மணம் வீசும் நாராயண தீர்த்தரின் நாவளம் நடமாடிய சோலை — தேமாஞ்சோலை—திருநாராயணர் தீர்த்த மடமாகும். இசைத்த தமிழ் உடல்களோடு இயைந்த மண் காவிரி மண்ணன்றோ! அவ்வழிதான் பூந்துருத்தி மண்ணும் புகழ் பெறுகிறது. ஆம் அம்மடத்தின் கருவறையில் உள்ள கருங்கற் சமாதியில்தான் திரு தீர்த்தங்கரர் உயிரோடு சீவ சமாதி எய்தியுள்ளார்.

இற்றைக்கு முந்நூறு ஆண்டுகட்கு முன்பு தஞ்சை மண்ணை மராட்டிய அரச வழியினர் ஆண்டு வந்த காலம். அமரசிங் மன்னரின் ஆட்சிக் காலம். வட இந்தியாவில் அந்தணர் குலத் தில் பிறந்து வளர்ந்து நல்லொழுக்கமும், நற்கல்வியும் பெற்று வளருகின்றார் நாராயணர். குலதெய்வம் வேங்கட மலையா னின் இன்னருளோடு ஆசான் சங்கர நாராயண தீர்த்தரின் தலை மாணாக்கனாகச் சிறப்புப் பெற்று, ஆசானின் 'தீர்த்தர்' எனும் பல்புகழ்ப் பெயர் ஏற்று நிறுத்த படிமையினராக நாராயணர் விளங்கினார்.

ஸ்ரீ பாகவதத்தில் பெருந்தேர்ச்சி பெற்ற பாராயணக்காரராகத் திகழ்ந்தார். பாகவதத்தின் கிருஷ்ண லீலாக்களின் தோய்வி னால் மணங்கொண்டு வேங்கடத்தானின் அருளால் நாடு முழுக்க கிருஷ்ணலீலாவின் சிறப்புக்களை இசையாலும், மெய்ப் பாடுகளாலும் மக்கள் மனங்கொள இசைத்துக் கடையரும் கடைத்தேறக் கால் காட்டிக் கை காட்டிக் கண்கள்-முகங் காட் டிக் கண்விழியே மால் காட்டி மயக்கினார். ஊர்வூராக இவ்வணம் பாகவதம் நடப்பித்து வந்த தீர்த்தரின் புனிதவுள்ளம் பூந்துருத்தி மண்ணில் ஏனோ புளகமுற்றது. அவ்விழைவு அவரை குடமுருட்டித் தென்கரையில் குடியேறச் செய்தது. ஆம் அம்மண் வளத்தில் மனம் மாழ்கினார்.

குடமுருட்டிக்கரை இசை மணம் பெற்றுப் பழுனிற்று. பழுமரம் நாடி பாட்டுத்திறங்கள் பறந்தன. இசைக் கலைஞர்களிடையே யொரு நசை. வேண்டுநர் வேண்டியாங்கு எய்திட அருளும் அருளாளர் நாராயணரிடம் அவர்கள் வேண்டினர். வேண்டுகை இதுதான் ... ... 'ஸ்ரீ பாகவதத்தில் தேர்ச்சி பெற்றுள்ள தீர்த்தர்

அதன் பத்தாங் காண்டமாகிய ஸ்ரீ கிருஷ்ண சரிதத்தினைத் தமிழக மக்கள் பெற்றுப் பேறடையுமாறு இசை நாடகமாக அருளிச் செயல் வேண்டும்.' செயல் பெரிதுதான்; வியன்புலமை யாளரின் உளப்பட்டது. ஸ்ரீ கிருஷ்ண லீலா தரங்கினியாகக் கண்ணனின் புகழ் பாடுபெற்றது. கேரளம் கதகளி நாட்டிய நாடகத்திற்கு உலகப் புகழ் பெற்றதாகும். கதகளியின் உயிரோ மெய்ப்பாடாகும். கதகளிக்குப் பொலிவு தருவது கண்ணனின் திருவிளையாடல்களே. கேரளக் கதகளியின் தமிழ் இணையாக விளங்கிற்று நாராயணரின் ஸ்ரீ கிருஷ்ண லீலா சுலோக சூர்ணிகை வசனம் கீர்த்தனம் எனும் இசை நாடகம். இக்கீர்த் தனைப் படைப்பே பிற்காலக் கீர்த்தனங்கட்குத் தோற்றுவாய் ஆகவும் அமைந்துள்ளது.

தீக்குள் விரலை வைத்தாலும் கண்ணனைத் தீண்டும் இன்பத் தையே பெற்று மகிழ்ந்த தீர்த்தர் அவன் புகழ் பாடியும், ஆடியும் அத்துவிதமடைந்தார்; அத்துவாக்களுக்கு வேண்டுவன வேண்டி யாங்கருளும் சித்தரானார்; ஊனுடம்பினை ஒளியுடம்பாக்கிடுஞ் சித்தராதலின் அவர்தம் புகழ்க்கொப்ப தஞ்சையின் மராட்டிய மன்னன் அமரசிங்கன் அவர் வதிந்து வந்த திருப்பூந்துருத்தி மடத்திலேயே அவர் அடைய விழைந்த சீவசமாதி நிலைக்குற் றிடும் வகையில் கருங்கல்லறை யொன்றினை நிலமட்டத்தடியில் சமைப்பித்து அவர் புகழ் பாடி நின்றனன்.

வீசுந் தென்றல் வினைபுரிந்திடும் மாசி மாதம் சுக்கில பட்சம் அட்டமியும் கார்த்திகை மீனும் கூடிய வியாழக்கிழமை யொன்றில் ஸ்ரீ மந் நாராயண தீர்த்தங்கர சுவாமிகள் அக் கல்லறையுள் உயிருடன் இறங்கி நிட்டை கூடி சீவசமாதியாய் முத்திநிலை யடைந்தார். தெய்வத்துள் வைக்கப்பட்டு வணங்கப்பட்டு வரு கின்றார். பௌர்ணமி திதிகளில் அவர் சந்நிதியில் இன்றும் பஜனைகள் இசைக்கப்படுகின்றன. நேர்ந்து கொண்டு மக்கள் செலுத்தும் நேர்த்திக் கடன்களையும் இன்று அவருடைய சந்நிதி யில் நிரம்பக் காணலாம்.

ஸ்ரீ நாரரயண தீர்த்தகுரு சுவாமிகளின் சீவசமாதியிடமும், அவர் புத்தம் பெற்ற சிந்தனைக்குரிய மிகப் பெரிய மாமரமும், மாமரத் தடியில் வந்தனைக்குரியதாய் இலங்கிடும் மிகச் சிறிய ஆனால் கலைப் படைப்பிற்கோர் சான்றெனத் திகழ்ந்திடும் பிள்ளையார் சிலையும் மூசுவண்டறைப் பொய்கையும், இயற்கைச் சூழலும் காண்மார் மனத்தை இசையுளாழ்த்துகின்றன.

இளங்கோவடிகள் தமிழ்க் கழகம்

42 ஆம் ஆண்டு நிறைவு விழா

நிகழும் திருவள்ளுவராண்டு 2012 மாசித் திங்கள் 20-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை (3—03—1981) பிற்பகல் 4 மணியளவில் கரந்தைப் புலவர் கல்லூரியில் இளங்கோவடிகள் தமிழ்க்கழக 42-ஆம் ஆண்டு நிறைவு விழா, தமிழ்ச் சங்கப் பெருமன்றத்தில், பொன்மாலை அந்திப் பொழுதின் பொலிவுக்குப் பொலிவூட்டும் வண்ணம் இனிதே தொடக்கமுற்றது. விழாவிற்குக், கரந்தைப் புலவர் கல்லூரி மேனாள் முதல்வர் திருமிகு புலவர் ந. இராமநாதன், எம். ஏ., அவர்கள் தலைமை ஏற்றுச் சிறப்பிக்க, கல்லூரி முதல்வர் திருமிகு பி. விருத்தாசலம், எம்.ஏ., அவர்கள் வண்ணத் தமிழில் வரவேற்புரை ஆற்றிட, மாணாக்கியர் தலைவி செல்வி இரா. மீனாள் அவர்களின் அறிக்கையோடு, சீரார்ந்த விழா செம்மையுறத் தொடங்கியது.

தலைவர்தம் முன்னுரையில், தமிழ்ச் சங்கத்தின் குறிக்கோள் குறித்தும், தண்டமிழ்ப் புலவர்களின் தொண்டுகள் குறித்தும், இனியாற்ற வேண்டிய செயற்பாடுகள் பற்றியும் விளக்கம் கூறி, மாணாக்கர் செவிகளில் செந்தமிழ்த் தேன் பிலிற்றினார்கள்.

''ஒரு மொழியைக் கலந்து இன்னொரு மொழி ஏற்றம்பெற இயலாது; கூடாது. ஒரு காலத்தில் வட மொழியைக் கற்றால்தான் பெருமை; அதைத் தமிழிற் கலந்தால்தான் சிறப்பு என்று கருதினார்கள்; கலப்படம் செய்தார்கள். தனித்தமிழில், ஏற்பட்ட அக்கலப்பினைப் போக்கவும், தமிழை நிலைநிறுத்தவும், மதுரை

இவ்விசைத் தமிழ்க் கிடங்கினைக் கடந்த 1979 ஆம் ஆண்டு திசம்பர் திங்கள் நிறைவு வாரம் முழுமையும் அங்கேயே தங்கி, ஆய்ந்து, அறிந்து, தெரிந்து, தெளிந்து, மயங்கி மாழ்கினேன். ஸ்ரீ மந் நாராண தீர்த்தகுரு சுவாமிகளின் இசை நாடக, தெய்வீகம், திசை பரந்து புகழ் பெற்றிடும் வகையில் என்னால் வெளிப்படுத்தப்படும் பேறு எனக்குக் கிட்டியமையும் அவனருளனவே கொண்டு வணங்குவன். தமிழகம் ஸ்ரீ மந் நாராயண தீர்த்தகுரு சுவாமிகளின் இசை நாடகச் செல்வத்தினைப் பெற்றுப் பேறடைவதாக. ★

யில் 1901இல் தமிழ் வளர்ச்சிக்கான நிறுவனமும், பிறகு திருவையாற்றிலும், அதன்பின் சங்கம் போற்றிய சந்தனத் தமிழுக்குக் கரந்தையிலும் சங்கம் நிறுவப்பட்டது. 'கரந்தை' என்றாலே மீட்டல் என்று இலக்கணம் பேசும். பிறமொழி ஆதிக்கத்திலிருந்து தமிழை மீட்ட பெருமையும் நம் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்குண்டு.''

''...... சங்கத்தின் கடமைகள், கல்வி நிலையங்களை உருவாக்கிய தோடு நின்றுவிடலாமா? இன்னும் எவ்வளவோ பணிகள் உள. இங்குப் பயிலும் மாணாக்கரும் பல்லாற்றானும் தமிழ்த் தொண் டாற்ற வேண்டும்; தமிழ்ப்பற்று, இன உணர்வு மிக்கு, இந்தி யாவிற்கே நாம் எடுத்துக் காட்டாய் விளங்க வேண்டும்....'

''......திருக்குறள் போன்ற உயர்ந்த இலக்கியங்களைப் பேசிப் பேசியே பொழுது கழிக்கக் கூடாது; அஃதை ஒரு வாழ்க்கை நூல் என்கிறார்கள்; ஒரு காலத்து மக்களை வைத்து, அவர் களையே மேல்வரிச் சட்டமாக்கி எழுந்தது திருக்குறள் என்பது மிகையன்று. அதைச் சமுதாயத்துக்குப் பயன்படுத்துமாறு, நம் பேச்சும் எழுத்தும் அமைய வேண்டும்.''

இவ்வண்ணமாய், இன்னும் பல, உயரிய சிந்தனைகளை வைத் துத், தலைவர் முன்னுரை நிறைவுற்றது. கல்லூரி முதல்வர் தம் வரவேற்புரையில்:

''...... எங்கள் மாணாக்கர்கள் செவி வாயாக நெஞ்சு களனாகக் கேட்கக் கூடியவர்கள்; செவிக்குணவு வேண்டும் சீர்மை உடையவர்கள்; நீங்கள் 'தொண்டை' உள்ளவரை பேசி னால், அதைக் கேட்பதில் தங்கள் 'தொண்டை' முழுமைப் படுத்திக் கொள்ளும் ஆற்றல் வாய்ந்தவர்கள்... அவர்களுக்குத் செந்தமிழ்த் தேனூட்ட வருக...வருக'' என்று, வந்திருந்த அறிஞர்களை வாழ்த்தி வரவேற்று அமைந்ததும், தமிழ் நாட கங்கள் — அன்றும் இன்றும்' என்னும் தலைப்பில் திருமிகு. டாக்டர். ஏ. என். பெருமாள், எம். ஏ; பி. எச்டி., அவர்கள் பல்வேறு ஆராய்ச்சிக் கருத்துக்களுடன் கூடிய அரியவுரையாற்றி அகம் மகிழ்வித்தார்கள்.

''உணர்ச்சி ததும்பினால் சொற்கள் குறையும்; உண்மையில் இங்கு வந்தவுடனேயே, உணர்ச்சி பொங்கியது — எனக்கு! சங்க இலக்கியம், உலக இலக்கியங்களில் எல்லாம் தலைநிமிர்ந்து நிற்பதுபோல், சங்க வாயிலில் தமிழ்ப் புரவலர் உமாமகேசு வரனார் சிலை, செம்மாந்து நிற்பதைக் கண்டேன்... ... ...

உள்ளே வந்தேன்......கண்ணகிக் கோவிலைக் கண்டு கூறிய 'கல் வெட்டுப் புலவரும்' 'பாவலர் ஏறாக' விளங்கி வரும் இலக்கணப் புலவர் ஒருவரும் இங்கு நடைபயில்வதால் மீண்டும் உணர்ச்சி பொங்கியது...... தமிழுணர்ச்சி தானாக வந்தது.........' என்ற பெருமை சான்ற முன்னுரையுடன் தலைப்பினுள் புகுந்தார்கள்.

''......தமிழ்த்தாய் நாடகத்தில் குறைபட்டு விட்டாள் என்று யாரும் கவல வேண்டா; மற்ற துறைகளைப் போலவே நாடக வகை யிலும் நந்தாய், செழுமையுறவே அமைந்திருக்கிறாள். தமிழை முத்தமிழ் என்று பிரித்தார்கள், நம்முன்னோர்.

''...... இயல், இசை, நாடகம் என்ற இம்மூன்றில் இயலுக்கும் முந்தியது இசை. காரணம் இசைக்கு வேண்டியது ஒலிதான்.... இயலுக்கும் எழுத்தொலிதானே வேண்டும்? ஆனால் நாடகம் என்பது இயலும், இசையும், நடிப்பும் கலந்ததாகும் ... ... இம்மூன்றில் எது முன்னையது?......''

''......திருவள்ளுவர் 'கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல' என்கிறார்.... கண் கலப் புற்றால் வாய்ச் சொற்களுக்கு வேலை இல்லை... சரிதான்! ஆனால் அங்கு என்னதான் நடந்தது? இயலும் இல்லை— இசையும் இல்லை—ஒரு காதல் நாடகம் நடந்தது ... ...''

''நாடகத்துக்கு இயலும் வேண்டா; இசையும் கூட வேண்டா; வெறும் செயலே போதும். கல்கத்தாவில், அண்மையில் ஒரு நாடகத்தை ஒலியே இன்றி 1-30 மணி நேரம் நடத்தினார்கள். யாவும் செயலிலேயே காட்டினார்கள். நன்றாகப் புரிந்தது ...'' என்று விளக்கி, எது முன்னையது என்று சிந்தித்துக் கொள்ளு மாறு, மாணாக்கர் தீர்ப்புக்கு விட்டார்கள்... பிறகு மேலும் பேசுங்கால்,

''......தொல்காப்பியர் மெய்ப்பாடு என்கிறார்; அஃதை ஆங்கிலத் தில் 'Emotion' என்கிறார்கள்; அது சரியான மொழிபெயர்ப் பாக எனக்குத் தோன்றவில்லை. எனவேதான் ஆங்கிலத்தில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதிய நான், மெய்ப்பாடு என்ற தலைப்பை மட்டும் தமிழிலேயே தந்தேன் ... ...'' என்று விளக்கினார்கள்.

''...... நம் தமிழர் நாடக உணர்ச்சி பெற்றிருந்தார்கள். கலித் தொகையின் அத்துணைப் பாடல்களும் சின்னச் சின்ன நாடகங்

களே...'' என்று, இதுபோல் பலவற்றான், தமிழரின் முன்னை நாடகத் திறம் முழுதும் விளக்கித், தற்காலத்து சோ, மெரீனா, கோமதிசுவாமிநாதன் போன்றோரின் நாடக இயல்புகளையும் விரிவாக்கி, ஒப்புமை காட்டி, அற்புத உரையாற்றினார்கள். அவர்களின் உரைக்குப் பின், திருமிகு புலமை வேங்கடாசலம் எம். ஏ., பி. எல்., அவர்கள் 'இளங்கோவடிகளின் இலக்கியப் புலமை' எனும் தலைப்பில், அரியதொரு ஆராய்ச்சி உரையாற்றினார்கள்.

பல்வேறு ஐயங்களைக் கிளறித், தீர்வுகளும் சொல்லி, இளங்கோவடிகளை அவையின்முன் நிறுத்திக் காட்டிய சிறப்பு, கேட்பார் நெஞ்சைப் பிணிப்பதாய் இருந்தது. அவர்தம் இலக்கிய நயமிக்க உரைக்குப் பின், மாணாக்கர் இணைச் செயலர் திரு. மோ. அந்தோணிராசு அவர்கள் நன்றி கூற, நாட்டுப் பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது.

விழாவில் கல்லூரியில் நிகழ்வுற்ற, பல்வேறு போட்டிகளில், தகுதி பெற்றவர்களுக்கும், மாவட்ட அளவில் நிகழ்ந்த போட்டியில் தகுதி பெற்றோர்க்கும், திருமிகு ந. இராமநாதன் அவர்கள் பரிசளித்துச் சிறப்பித்தார்கள்



⁂ கவிதைப் பண்பு ⁂

செஞ்சொற் கொண்டல், தமிழாகரர்
டாக்டர் **சொ. சிங்காரவேலன்** எம். ஏ., பிஎச். டி.,
[தமிழ்ப் பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மாயூரம்]

கவிதைப் பண்பின் கொடுமுடி:

ஓர் உண்மையான கவிதைக்கு இலக்கணம் யாது? இவ்வினாவிற்கு யாரும் நேரடியாக விடை சொல்லிவிட முடியாது. அந்தக் கவிதையில் கையாளப்பட்டிற்கும் சொற்கள், அந்தச் சொற்களிலிருந்து புறப்படும் ஒலிநயம், அடுக்கடுக்காகப் புறப்படும் உணர்வு வெளியீடு, அவற்றால் பதியும் எண்ணங்கள், எண்ணங்களுக்கு அடிப்படையான ஆழ்ந்த அனுபவம் முதலிய எல்லாம் கவிதைக்குத் தேவைப்படுகின்றன. உண்மையான கவிதையை நாம் படிக்கும்போது இவையனைத்தும் அதில் அமைந்திருக்கக் காணலாம். சங்கத் தமிழ்ப் பாட்டுக்களையும் சரி, இடைக்காலப் பக்திப் பாட்டுக்களையும் சரி, பிற்காலச் சிற்றிலக்கியப் பாட்டுக்களையும் சரி—நாம் படிக்கும்போது, சில கவிதைகளில் நாம் ஒன்றிவிடுகிறோமே, அதற்குக் காரணம் இதுவே. அந்த 'ஒன்றிப்பு'த்தான் ஒரு கவிதைக்கு அடிப்படையான வெற்றி; அந்த ஒன்றிப்புத்தான் அதில் அமைந்துள்ள கவிதைப் பண்புக்குக் கொடுமுடி; கவிதையில் ஒன்றுதற்குற்ற உயர் பண்புகள் தாமாக வந்து அமைதல் வேண்டும்.

சீரிய படைப்புக்கள்:

சிறந்த கவிஞர்கள் இந்த வகையில் தங்கள் படைப்புக்களை வழங்கியிருக்கிறார்கள். எம்மொழி கவிதைக்கும் இது பொருந்துவதாக உள்ளது. வேர்ட்சு வொர்த்து கவிதைகளை ஆராய்ந்த ஏ. சி. பிராட்லி அத்தகு மாண்பு அக்கவிதைகளுக்கு எப்படி வந்தது என்று விளக்கும் வரிகள் இங்கு குறிப்பிடத்தக்கன. ''பெரும்பாலான கவிஞர்களைப் போன்று போரைப் பற்றியோ காதலைப் பற்றியோ வேர்ட்சு வொர்த்து பாட முற்படவில்லை; இயற்கை இறந்த உணர்வுகளைப் பற்றியோ, துன்பியல் உணர்வுகளைப்பற்றியோ அவர் பாட முற்படவில்லை. மாறாக அவரது தனிச் சிறப்புமிக்க கவிதைகள், மிக எளிய, இயல்பான பொருள்களின் உயிர்த் தன்மையை வெளிப் படுத்துவனவாக அமைந்துள்ளன. மனித வாழ்வு, இயற்கை இரண்டிலுமுள்ள உயிர் நாடியைத் தொட்டு விடும். பண்பு மிக்கவையாகவே

அவரது கவிதைகள் விளங்கின. இயற்கை நமக்கு வழங்கும் இன்பத்தை எடுத்து வழங்குவதால்தான் அவரது கவிதைகள் சிறந்து விளங்குகின்றன'' ["It was not Wortsworth's function to sing, like most great poets. of war and love, or tragic passions or the actions of supernatural feelings. His peculiar function was 'to open out the soal of little and familiar things' alike in nature and in human life, this poetry is great because of the exordinary power into which he feels the Joy offxed to us in nature ... ...' —A. C. Bradley, Oxford Lectures on Poetry (1959) P.107]

சாவாவரம் பெறல்:

சிறந்த கவிஞர்களின் இத்தகு தனித்தன்மையைப் புரிந்து கொண்டால்தான் அவர்களது இலக்கியப் படைப்புக்களை உணர்ந்து அநுபவிக்க முடியும். 'கவி' என்ற வடமொழிச் சொல்லிற்குச் 'செய்பவன்' அல்லது படைப்பவன் என்பதே பொருள் என்பர். செய்யுளாயினும் உரைநடையாயினும் படைப்பவனாதலின் அவனைக் 'கவி' என்ற சொல்லால் சுட்டுவது வடநூல் வழக்கு, ["Kavi; the Sanskrit word Poet. In classical Sanskrit it is applied to any makes of verse or even of Prose." —Sri Aurobindo, "The Future Poetry" (1953) P. 39] ஆம்; கவிஞன் தன் அநுபவத்தைத் தன் கவியில் வடிக்கின்றான்; அதனால் அது சாவாவரம் பெற்றுப் பிறங்குகின்றது.

மூன்றன் கூட்டு:

அகத்தெழுச்சி, அழகு, இன்பம் ஆகிய மூன்றும் சேர்ந்து கவிதை உருவாகின்றது; அவற்றை நமக்கும் வழங்குகின்றது. அகத்தெழுச்சியால் உந்தப்பட்ட ஒலிநயம் வாய்ந்த சொற்களின் வாயிலாக நம்மை அவற்றுடன் ஒன்றுவிப்பது என்கின்ற அரவிந்தரின் மொழிகளை மறக்க இயலாது. ['Poetry comes into being at the direct call of three powers, inspiration beauty and us to them by the magic charm of the inspioed rhythmic word" —Sri Aurobindo, "The Future Poetry" (1953) P 303, 304]

அப்பர் தரும் கவிதை ஓவியம்:

தில்லையம்பலக் கூத்தன் திருவுருவ அழகில் ஈடுபட்ட அப்பரடிகள் அப்பெருமான் திருமுன்பு நின்று திருக்குறிப்பில் ஈடுபட்டுத் தீந்தமிழ்க் கவிதை இசைக்கின்றார்; எம்பெருமானின் பேரழகில்

ஈடுபட்ட அடிகளார், அந்த இன்பத்தை அகத்தெழுச்சி (Inspration) ததும்ப ஓவியத் தமிழாக்குகின்றார். ''குனித்த புருவமும் கொங்கைச் செவ்வாயில்'' எனத் தொடங்கும் தெய்வீகக் கவிதை திருவிருத்தமாக வெளிப்படுகின்றது.

''முடிகொண்ட மத்தமும், முக்கண்ணின் நோக்கும்,
முறுவலிப்பும்,
துடிகொண்ட கையும், துதைந்தவெண் ணீறும்
சுரிகுழலாள்
படிகொண்ட பாகமும், பாய்புலித் தோலும்,என்
பாவிநெஞ்சிற்
குடிகொண்டவா! தில்லை அம்பலக் கூத்தன்
குரைகழலே!''

(அப்பரடிகள் திருப்பதிகங்கள்—786)

என்று மேலும் பெருக்கெடுக்கின்றது நாவுக்கரசரின் நற்றமிழ்ப் பாட்டு. அழகு, இன்பம், அகத்தெழுச்சி மூன்றின் கூட்டுத் திறனே கவிதையாக மலர்கின்றது என்பதற்கு இதனினும் சீரிய எடுத்துக் காட்டு வேண்டுமோ? தமிழகத்து மெய்ஞ்ஞானியராகிய (mystio - saints) நாயன்மார்கள், ஆழ்வாராதியர் பாடிய திருப்பாட்டுக்கள் அனைத்தும் ஆற்றல் வாய்ந்த உணர்வுகளின் வெளிப்பாடுகள் மட்டும் அல்ல; அவை ஆழ்ந்த அனுபவங்களின் வெளிப்பாடுகள்'' ['The songs of the mystic-saints are spontaneous outpowrings not of "powerful emotions" alone but of ' profound experince" —K Seshdri. "THE RELIGION OF THE ALWARS" —A seminar on saints. T. M. P. Mahadevan (Ed) 1960-P. 161] என்ற மெய்ம்மொழிக் கிணங்க உணர்ச்சி வாய்ந்த அநுபவத்தின் வழி வந்த விழுமிய கவிதைகளாக இவை போல்வன விளங்குகின்றன.

தன் உயிர்த்தோழிக்குத் தலைவி ஒருத்தி உரைப்பதாகக் கற்பனை. 'உடல் வேறுபடுகின்றாயே வரைவு வரும் வரை பிரிந்திருப் பாயோ? என்ற தோழிக்கு அவள் உரைக்கும் சொற்கள். மிகச் சிறிய கவிதையே; ஆயினும் சிறந்து விளங்கும் சங்கப் பாட்டு:

''எழுதரு மதியம் கடற்கண் டாஅங்கு
ஒழுகுவெள் ளருவி ஓங்குமலை நாடன்
ஞாயிறனையன் தோழி
நெருஞ்சி யனையவென் பெரும்பணைத் தோளே''

(குறுந்தொகை–315)

மலைநாடன் ஆகிய தலைவனை எண்ணும்போதே தலைவிக்குப் பேரின்பம் உண்டாகின்றது; அவனுக்குத் தான் காதலி என்று எண்ணும்போது அப்பேரின்பம் அவளுள் கிளர்ந்து எழுகின்றது. நெருஞ்சி மலர் ஞாயிற்றையே நோக்கி நிற்கும் இயல்புடையது. ஞாயிறு கீழ்த்திசையில் இருந்தால் கிழக்கு நோக்கியும், மேற்றிசை செல்லின் மேற்கு நோக்கியும், உச்சி வானத்திருப்பின் உச்சி நோக்கியும், நிற்பது. ஞாயிற்றை நோக்கிய நெருஞ்சி மலர்போலத் தலைவனை என் தோள் நோக்கி நிற்கும்'' என்று கூறி முடிக்கின்றாள். தன் தோள்மேல் வைத்துக் கூறினாலும் தான், அவன் கருத்துப்படியே ஒழுகுவேன் என்று அவள் கூறுவதாகக் கவிஞன் படைத்துள்ள படைப்பு இப்பாட்டு.

'உதயமாகின்ற பிறை கடலினிடத்தே காணப்பட்டாற் போல அருவி வீழ்கின்ற மலையை உடைய நாடன்' என்று தலைவனை முதல் இரண்டு வரிகள் சுட்டுகின்றன. தலைவன் அன்பு ததும்பி பாயும் உள்ளத்தை உடையவன்; அவனது அன்புப் பெருக்கே 'அருவி' என்ற சொற்குறிப்பு எனலாம்; ஓங்கிய பண்புகள் பல வற்றால் மலைபோல நிமிர்ந்து தோன்றும் மாண்புடையவன் என்ற சொற்குறிப்பே 'மலைநாடன்' எனலாம். அதற்குமேல் சிறந்து விளங்கும் உவமை, மதியம் கடலிடை உதிக்கின்ற பேரழகு போல என்பது; அவனது 'குளிர்ச்சி' 'மதியம்' என்ற சொல்லிலும், அகன்று விரிந்த பண்புகளின் எல்லை காண்டலரிய பெருக்கம் 'கடல்' என்ற சொல்லிலும் விளங்குகின்றன அல்லவா? மேலும் 'ஞாயிறு' போன்றவன் என வருவது, அவன் பகைவர்க்கு நடுக்கம் காட்டுபவன் என்ற அவன் ஆண்மையைக்'குறிக்கின்றது; தான் அவனுக்கு முன் 'சிறிய நெருஞ்சிப்பூ'ப் போன்றவள் என்று கூறுவதால், அவனுடைய தூய அன்பிற்கு ஆட்பட்டு நிற்கும் திறத்தை உணர்த்திவிட்டாள். இதன் சொல்லமைப்பு, அழகிய உவமை, சிறிய வடிவம் ஆகிய அனைத்தும் சேர்ந்து ஒரு பண்புடைய பெண் உள்ளத்தை இனிது உணர்த்துகின்றன; ஆம் இதுவேயன்றோ கவிதைப்பண்பு! இவ்வரிகளை வாய்விட்டு படித்தலுற்றால் விளையும் ஓசையும் நெஞ்சை நெகிழ்விக்கின்றது அன்றோ? நம்முடைய 'ஒன்றிப்பு'க்கு உரிய ஆற்றல் இது போன்ற கவிதைகளுக்கே உண்டு.

பதிப்பாசிரியர் குழு :

1. திரு. எஸ். நடராசன், எம். எல். ஏ.,
   தலைவர்,
   கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

2. திரு. வித்துவான் க. வெள்ளைவாரணனார்,
   துணைப் பேராசிரியர்,
   அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

3. திரு. வித்துவான். பி. விருத்தாசலம், எம். ஏ.,
   முதல்வர்.
   கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

4. திரு. வித்துவான். ச. பாலசுந்தரம்.
   துணை முதல்வர்.
   கரந்தைப் புலவர் கல்லூரி தஞ்சாவூர்.

5. திரு. வித்துவான். சி. கோவிந்தராசன்.
   பேராசிரியர். (ஓய்வு)
   கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்

6. திரு. வித்துவான். மீனா இராமதாசன், எம். ஏ.,
   முதனிலைத் தமிழாசிரியர்,
   உமாமகேசுவர மேல்நிலைப்பள்ளி,
   கரந்தை, தஞ்சாவூர்.

7. திரு. அரங்க வே. சுப்பிரமணியன் பி. ஏ.,
   அமைச்சர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
   பொழிற்றொண்டர்.

—o—



Regd No. TN / TJ /17.

தமிழ்த்தாய் வாழ்க

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்

		உள்நாடு	வெளிநாடு
1. ஆண்டு வரி	...	10 — 00	12 — 00
2. தனி இதழ்	...	0 — 90	
3. ஆயுள் வரி	...		100 — 0.

சங்க உறுப்பினர்கள்

திங்கள் வரி	0—25	காசுகள்
ஆண்டு வரி	3—00	
ஆயுள் வரி	100—00	

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்:

நெல்லை வருக்கைக்கோவை	0—10
சித்தரந்தாதி	0—12
சுருதி வீணை	0—20
பரத சாத்திரம்	1—52
கவியரசு நினைவு மலர்	1—05
சிவமும் செந்தமிழும்	0—25
Garland of Tamil Poetry	2—00
கச்சிக் கலம்பகம் — (பூண்டி அரங்கநாத முதலியார்)	0—'0
தொல்—பொதுப்பாயிர உரை	0—12
தமிழரசி குறவஞ்சி	0—62
யாழ்நூல்—சுவாமி விபுலானந்தர்	50—00
கட்டுரைப் பொழில் (மணிவிழா மலர்)	12—0[illegible]
மெய்ஞ்ஞானத்தின் — கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு (இரண்டாம் பதிப்பு)	2—00
நக்கீரர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் (இரண்டாம் பதிப்பு)	3—00
கபிலர் ,, ,,	4—00

ஆசிரியரும் வெளியிடுபவரும்: திரு அரங்க. வே. சுப்பிரமணியம், பி. ஏ., கரந்தைத் தமிழ்ச் சங்கம், கருந்திட்டைக்குடி. தஞ்சாவூர்-613 002.
அச்சிடுபவர், திருமதி. S. நிர்மலா, அன்னை அச்சகம், 1734, காந்திசாலை. தஞ்சாவூர் - 613002.